டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் பால் உற்பத்தியாளர் சங்கங்களில் தற்போது ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த பெரும்பாலான மகளிர் முன் வருவதால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியில் ஆதி திராவிட மகளிர் பால் உற்பத்தியாளர் சங்கம் ஏற்படுத்தும் சிறப்பு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? ஆம் எனில் அதை நடைமுறைப்படுத்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தீவிரமாக இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 455, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

455—

தொழிற்சாலை புகையால் விளையும் சுகாதாரக் கேடுகளைத் தடுத்தல்

*37872—திரு. ஜெ. பாலகங்காதரன் :

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளத்தில் இருக்கும் அரசு சிமெண்ட்ஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் புகையால் விளையும் சுகாதாரக் கேடுகளைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் ஆலங்குளம் சிமெண்ட் ஆலை 1970-ல், மிட்பிராசசிங் டெக்னாலஜி முறையில் சிமெண்ட் தயாரிக்க நிறுவப்பட்டது. இந்த ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் காற்று பெரும் அளவுக்கு கரியையும் சிறிது அளவு சுண்ணாம்பையும் கலந்ததாக, மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்த அளவுக்கு அதிகமாக மாசு வெளிவருகிறது. அதைப் பெருமளவில் குறைக்க ரூ. 125 லட்சம் செலவில் மாசுக் காற்றை ரீ சைக்ளிங் (Recycling) முறையில் சுத்தப்படுத்தும் திட்டமும், 95 லட்சம் ரூபாய் செலவில் Electro Static

1995 ஏப்ரல் 26]

Precipitator (E.S.P.) என்ற சாதனத்தின் மூலம் சுத்தப்படுத்தும் திட்டமும் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது. இதனால் காற்று மாசு பெருமளவில் கட்டுப்படுத்தப்படும்.

முற்பகல் *11-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1989* ஆம் ஆண்டிலிருந்து இந்த ஈ.எஸ்.பி. என்னும் இயந்திரம் அங்கே வேலை செய்யாமல் இருக்கிறது. இதனால் அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயராலே அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாம் மூலம் கீழ்க்கண்ட நோய்கள் கண்டறியப்பட்டுள்ளன. Tropical esenophilia, allergic bronchitis, chronic bronchitis, tuberculosis, bronchogenic carcinoma, i.e., lung cancer and silicosis. அவற்றையெல்லாம் அந்தப் பகுதியில் நீக்க வேண்டுமென்று அங்கே கேட்டபோது, இந்தத் தொழிற்சாலையிலிருந்து வருகிற புகைதான் காரணம் என்று சொல்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, இந்த மாதத்திற்குள்ளாக அந்த ஈ.எஸ்.பி. இயந்திரத்தை வேலை செய்வதற்கு உத்தரவிடுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் காற்றின் மாசு அளவைக் கண்டறியும் பொருட்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் *17-3-1993* முதல் *19-3-1993* முடிய காற்று மண்டலப் பகுப்பாய்வு சோதனையை நடத்தியது. இந்த ஆய்வு அறிக்கையின்படி, காற்று மண்டலத்தில் தூசியின் அளவானது வாரியம் நிர்ணயித்த அளவைவிட மிக அதிகமாக இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, தூசி அளவைக் குறைக்க எல்லா வகையிலும் தற்போது அமைக்கப்பட்டிருக்கிற தூசி கட்டுப்பாட்டு சாதனங்களின் திறனை மேம்படுத்தவும் மற்றும் புதிய சாதனங்களை பொருத்தவும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் தொழிற்சாலையில் *1982-84*ல் அமைக்கப்பட்ட ஈ.எஸ்.பி. யிலிருந்து வரக்கூடிய தூசியில் அதிக அளவு கரியும் சிறிதளவு சுண்ணாம்பும் கலந்து வருவதால் இதை மீண்டும் ரீ-சைக்ளின் முறையில்

பயன்படுத்தவும் தேவையான தொழில் நுட்பம் இல்லை. ஆனால் 1993-94 ஆம் ஆண்டு தேசிய கட்டிட கட்டுமானப் பொருள்கள் கவுன்சில் (National Council for Building Materials) அந்த ஈ.எஸ்.பி. சாதனத்தில் சேரும் கரித்தூளை ரீ-சைக்ளிங் முறையில் பயன்படுத்த ஒரு திட்டத்தை வகுத்துக் கொடுத்துள்ளார்கள். இந்தத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 125 லட்சம் ஆகும். அத்துடன் அந்த ஈ.எஸ்.பி. இயந்திரமும் ரூ. 95 லட்சம் செலவில் இதன் தயாரிப்பாளர்களால் சர்வீஸ் செய்யப்பட இருக்கிறது. மேற்கண்ட இரண்டு திட்டங்களையும் விரைவில் செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் முடிவடைந்ததும் இந்த முறையிலிருந்து வெளியேறும் காற்றில் இருக்கும் மாசு, பெருமளவு கட்டுப்படுத்தப்படும்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அங்கு வெட் ப்ராசசிங் முறையில் அதிக அளவில் புகை வெளியேறுகிறது என்று சொல்கிறார்கள். துலுக்கப்பட்டி ஆர்.ஆர். நகர் சிமெண்ட்ஸ்-ல் டிரை ப்ராசசிங் முறையில் சிமெண்ட் தயாரிக்கப்படுவதால் அங்கே புகை அளவு குறைகிறது. எனவே அரசு அந்தத் தொழிற்சாலையில் டிரை ப்ராசஸ் முறையில் சிமெண்ட் தயாரிக்கவும், ஏற்கெனவே அந்தப் பகுதியில் பாதிக்கப்பட்டிருக்கிற பொதுமக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் மருந்துகளையோ அல்லது நஷ்ட ஈட்டையோ கொடுக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையானது வெட் ப்ராசசிங் முறையில்தான் இயங்குகிறது. அதை டிரை ப்ராசசிங் செய்வதற்காக ரூ. 150 கோடி செலவில் இந்த ஆலையிலிருந்து ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசினுடைய அனுமதிக்காக அனுப்பப்பட்டு உள்ளது. அது வந்தவுடன் இந்த ஆலையானது டிரை ப்ராசசிங் முறையில் செயல்படுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். அங்கே டிரை ப்ராசசிங் செய்ய வேண்டுமென்று சொன்னால், ஏற்கெனவே போட்ட ஒப்பந்தப்படி, 150 கோடியாகும். இப்போது சில மூலப்பொருள்களின் விலைகள் ஏறிக்கொண்டிருப்பதால் இன்னும் அது அதிகமாகி, 200 கோடி ரூபாய் அளவுக்கு இந்தத் திட்டத்திற்குத் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிற காரணத்தாலே, அரசே இந்தப் பணத்தைப் போடமுடியாத நிலை இருப்பதால், இதை அசோசியேட் செக்டாரில் கொண்டு வந்து வேறு ஒரு தகுதியான தனி நபரைத் தேந்தெடுத்து அவருடைய முதலீட்டையும் கொண்டுவந்து இந்த டிரை ப்ராசசிங்

1995 ஏப்ரல் 26]

முறையை கொண்டுவருவதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. ஆகவே இந்த டிரை ப்ராசஸ் முறையைச் செயல்படுத்தும்போது நிச்சயமாக இந்த ஆலையிலிருந்து காற்று மூலம் வெளியேறுகிற மாசை அதிகமாக குறைத்து அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு கேடு ஏற்படாமல் அரசு பார்த்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 456, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

456—

கைத்தறி துணிகளின் தேக்கத்தைப் போக்க நடவடிக்கை

*26503—**திரு. ஆ. சுப்புரத்தினம்:**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறித் துணிகளின் தேக்கத்தைப் போக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறைதோறும் துறைதோறும் புதுமைகளைப் புகுத்தி ஒரு பொற்கால ஆட்சியை நடத்தி வரும் நம்முடைய இதய தெய்வத்தினுடைய நல்லாட்சியில் கைத்தறித் துறையின் துணிகளுடைய தேக்கத்தை போக்கும் முகத்தான் அயல்நாடுளில் கண்காட்சிகள் துவக்கப்பட்டு அதன்மூலம் ஏற்றுமதிகளை விஸ்தரிக்கக் கூடிய சாத்தியக்கூறுகளை அரசு ஆராயுமா என அறிய விரும்புகிறேன்.